# விதை நிலங்களின் உவமை

ஆர். பாலா

REFORMED PUBLICATIONS
சீர்திருத்த வெளியீடுகள்
சென்னை, இந்தியா

**விதை நிலங்களின் உவமை**

*ஆர். பாலா*

*முதல் பதிப்பு: ஜூன்* 2025

***சீர்திருத்த வெளியீடுகள்***
***சென்னை.***
*கைப்பேசி:* +91 9445671113
*ஈமெயில்:* msjamesin@gmail.com

*கிறிஸ்தவ தமிழ் இலக்கியங்கள் குறித்த*
மேலதிக தகவல்களுக்கு www.biblelamp.me
*வலைப்பூவைப் பார்க்கவும்.*

# பொருளடக்கம்

அறிமுகம் ....................5

சுவிசேஷ நூல்களில் விதைநிலங்களின் உவமை ....................9

விதை நிலங்களின் உவமை ....................15

1. உவமைகள் ....................17

2. வழியருகே விழுந்த விதை ....................35

3. கற்பாறை நிலம் ....................57

4. முள்ளுள்ள நிலம் ....................81

5. நல்ல நிலம் ....................101

Bibliography ....................127

# அறிமுகம்

மத்தேயு 13ல் இயேசு கிறிஸ்து பிரசங்கித்த விதைக்கிறவனின் உவமைக்கு விளக்கமளிக்கிறது இந்நூல். கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோருக்குப் பரிச்சயமானது இந்த உவமை. இதே உவமையை மாற்கு 4ம் அதிகாரத்திலும், லூக்கா 8ம் அதிகாரத்திலும் வாசிக்கிறோம். இந்த உவமையைப் பற்றிய அனைத்து உண்மைகளையும் அறிந்துகொள்ள இந்த மூன்று பகுதிகளையும் கவனத்தோடு வாசிப்பது அவசியம்.

பெரும்பாலானோருக்குப் பரிச்சயமான உவமையாக இது இருக்கிறது என்ற காரணத்தினால் இதை எல்லோருமே தெளிவாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்று அர்த்தமல்ல. உவமைகளின் அர்த்தத்தை அறிந்துகொள்ள அதற்கான வேதவிளக்க விதிகளைப் பயன்படுத்த வேண்டியது அவசியம். அது தெரியாதவர்கள் உவமைகளுக்குத் தவறான விளக்கங்களைத் தொடர்ந்து கொடுத்து வருகிறார்கள். கண்டதற்கெல்லாம் எதையும் உருவகப்படுத்தி ஆவிக்குரிய பொருளைத் தேடித் தேடிக் கொடுப்பதே நம்மினத்துப் பிரசங்கிகளின் வழமையாக இருக்கிறது. அது ஆபத்தானதும், அருவருப்பானதுமான செயல். கர்த்தரின் வார்த்தையை அந்தவிதத்தில் உருமாற்றிப் பயன்படுத்தக்கூடாது. சீர்திருத்த பிரசங்கியான ரொபட் சார்ள்ஸ் ஸ்பிரவுல் (R.C. Sproul), இந்த விதைக்கிறவனின் உவமையே எல்லா உவமைகளிலும் கடினமானது என்று கூறியிருக்கிறார். அது கேட்பதற்கு ஆச்சரியமாக இருக்கலாம். உண்மையும்

அதுதான். இந்நூலை வாசித்து முடிக்கிறபோது அதற்கான பதிலை நீங்கள் தெரிந்துகொள்வீர்கள்.

இந்த உவமையை நான் என் சபையில் ஆங்கிலத்தில் பிரசங்கம் செய்திருக்கிறேன். அதையே மறுபடியும் தமிழிலும் பிரசங்கம் செய்தேன். அவை அநேகருக்கு ஆசீர்வாதமாக இருந்திருக்கின்றன; தொடர்ந்தும் பலனளித்து வருகின்றன. பெரும்பாலும் நம்மினத்துப் பிரசங்கிகள் வேதத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதில் பிரச்சனையுள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள். வேதவிளக்க விதிகளை அவர்கள் அறியாமலும், அவற்றை எப்படிப் பயன்படுத்துவது என்று தெரியாமலும் இருப்பது மட்டும் அதற்குக் காரணமல்ல; வேத இறையியலையும், முறைப்படுத்தப்பட்ட இறையியலையும் கற்றுத் தேர்ச்சியடையாமல் இருப்பதும் அதற்கு முக்கிய காரணம். காலப்பிரிவுக் கோட்பாட்டைக் (Dispensationalism) கண்மூடித்தனமாகப் பின்பற்றி வருகின்றவர்கள் பொதுவாகவே உவமைகளுக்குத் தலைகீழான ஆவிக்குரிய விளக்கங்களைத் தந்து வருகிறார்கள். லூக்கா 16ல் காணப்படும் ஐசுவரியவானும், லாசருவும் ஆகிய உவமையை, இயேசு அதை உவமை என்று சொல்லாத ஒரே காரணத்தினால், அது வரலாற்றில் நிகழ்ந்த சம்பவம் என்று பிரசங்கித்து வருகின்ற அதிகப்பிரசங்கிகளும் இருக்கிறார்கள் என்று என்னிடம் ஒருவர் சொன்னார். நம்மினத்துப் பிரசங்கங்களில் உவமைகள் அநாவசியத்துக்கு வாராவாரம் பிரசங்க மேடைகளில் அடித்துத் துவைத்தெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நூலை வாசிக்கின்றபோது அதை நீங்கள் நிச்சயமாக உணர்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. வேத இறையியல் பஞ்சம் நம்மவர்கள் மத்தியில் இருக்கும் காரணத்தினால்தான் இந்த விதைக்கிறவனின் உவமைக்கான விளக்கத்தைப் பயன்பாடுகளோடு நான் வெளியிடத் தீர்மானித்தேன். இது பொதுவாக கிறிஸ்தவர்களுக்கும், போதகப் பிரசங்கப் பணியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் உதவும் என்று நம்புகிறேன்.

ஒன்றைச் சொல்ல மறந்துவிட்டேனே! பொதுவாக அனைவரும் அறிந்திருக்கும் இந்த உவமைக்கான தலைப்பு விதைக்கிறவனின் உவமை. உண்மையில் இந்தத் தலைப்பை வேதம் தரவில்லை. மூன்று சுவிசேஷ நூல்களிலும் வசனம்

“விதைக்கிறவன் விதைக்கப் புறப்பட்டான்” என்று மட்டுமே ஆரம்பிக்கிறது. ஆங்கில மொழிபெயர்ப்புகளில் விதைக்கிறவனின் உவமை என்ற தலைப்பை மொழிபெயர்ப்பு செய்தவர்கள் அந்தப் பகுதிக்குத் தந்திருக்கிறார்கள். தமிழ் வேத மொழிபெயர்ப்புகளில் அத்தகைய தலைப்புகள் கிடையாது. இந்த உவமையைக் கூர்ந்து கவனிப்பீர்களானால் இது விதை நிலங்களைப் பற்றியே விளக்குகிறது என்பதை உணர்வீர்கள். அதனால் இந்நூலுக்கு விதை நிலங்களின் உவமை என்ற தலைப்பை வைக்கத் தீர்மானித்தேன். இந்தக் கருத்தை எனக்கு முதலில் அறிமுகப்படுத்தியவர் ரொபட் சார்ள்ஸ் ஸ்பிரவுல். இந்த உவமை நான்கு வகை விதை நிலங்களைப் பற்றியது. அவற்றில் ஒன்று மட்டுமே பலன் தருவதாக அமைந்திருக்கிறது. அந்த நான்காவது நிலம் மட்டும் ஏன் பலன் தருவதாக இருக்கிறது என்பதற்கான ஆழமான பதிலை இந்த உவமை உள்ளடக்கமாக மட்டுமே கொண்டிருக்கிறது. அந்தப் பதிலைத் தெரிந்துகொள்ள வேத இறையியலிலும், முறைப்படுத்தப்பட்ட இறையியலிலும் ஞானமிருப்பது நிச்சயம் அவசியம். இந்நூல் அந்தப் பதிலை நீங்கள் அறிந்து பயனடையத் துணை செய்யும்.

உவமைகளை எளிதாக விளங்கிக்கொள்வது சிறிது கடினம். இருந்தபோதும் அவற்றை விளங்கிக்கொள்ளப் பயன்படுத்த வேண்டிய விதிகளை முறையாகப் பயன்படுத்தினால் தவறில்லாமல் அவற்றை விளங்கிக்கொள்ள முடியும். அதனால், நூலின் முதல் அதிகாரத்தில் உவமைகளை எவ்வாறு முறையாக விளங்கிக்கொள்ளுவது என்பதற்கான விதிகளை சுருக்கமாக விளக்கியிருக்கிறேன். வாசகர்களுக்கும், பிரசங்கப் பணியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் இது பயனளிக்கும் என்று நம்புகிறேன். அதையடுத்து விதை நிலங்களின் உவமை காணப்படும் சுவிசேஷ நூல்களின் மூன்று பகுதிகளையும் (மத்தேயு 13, மாற்கு 4, லூக்கா 8) தந்திருக்கிறேன். இது நூலை வாசிக்கும்போது அடிக்கடி அதற்குரிய வசனப்பகுதிகளைத் திருப்பிப் பார்த்துக்கொள்ள வாசகர்களுக்கு அது உதவியாக இருக்கும்.

விதை நிலங்களைப் பற்றிய இந்த நூலின் நான்கு செய்திகளையும் (2–5 அதிகாரங்கள்) ஆடியோவில் இருந்து எழுத்துருவாக்கித் துணைபுரிந்திருக்கும் சகோதரன் சிவாவிற்கும்,

இதன் அட்டைப்படத்தை அழகாகத் தயாரித்து, நூலுருவில் செய்திகளைக் கொண்டுவந்து சீர்திருத்த வெளியீடுகளின் மூலம் அச்சிட்டு வெளியிடும் சகோதரன் ஜேம்ஸுக்கும் என்னுடைய நன்றிகள். இந்த உவமைக்கான விளக்கங்களை நூலாக வெளியிடலாமே என்ற ஆலோசனையைத் தந்தவர் சிவா. அதுவே இப்போது அவற்றை எழுத்தில் படைப்பதற்குக் காரணமாக அமைந்தது. சிவாவுக்கு என் நன்றிகள். எழுத்துப் பிழைகளைத் திருத்தி உதவியிருக்கும் சகோதரன் பாலாவிற்கும், சகோதரி ரோசலின் ஜேம்ஸுக்கும் என் நன்றிகள். இவர்களுடைய தன்னலமற்ற உழைப்பு என் பணியை மிகவும் இலகுவாக்குகிறது. நூலை உங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்குப் பயனுள்ளதாக இருக்கும்படிப் பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்த வேண்டும் என்பதே எங்கள் ஜெபமாக இருக்கிறது.

அன்புடன்,

ஆர். பாலா
நியூசிலாந்து

# விதை நிலங்களின் உவமை

# 1
# உவமைகள்

உவமைகள் புதிய ஏற்பாட்டில் மட்டுமல்லாமல் பழைய ஏற்பாட்டிலும் காணப்படுகின்றன. ஏறக்குறைய 30 லிருந்து 40 வரையிலான உவமைகளைப் புதிய ஏற்பாட்டில் காணலாம். இவற்றை இயேசு கிறிஸ்துவே பெரும்பாலும் தன்னுடைய போதனைகளில் பயன்படுத்தியிருக்கிறார். இவற்றில் 23 மத்தேயு சுவிசேஷத்திலும், 9 மாற்குவின் சுவிசேஷத்திலும், 24 லூக்காவின் சுவிசேஷத்திலும் காணப்படுகின்றன. இவற்றில் சில உருவகங்களாகவும், ஒப்பீட்டு அணிவகையாகவும் இருக்கின்றன. ஆகவே, அனைத்துமே எழுத்துபூர்வமாக உவமைகள் என்று சொல்லிவிட முடியாது. உவமைகளுக்கும், உருவகம், அடையாளமொழி போன்ற ஏனைய அணிவகைகளுக்கும் இடையில் காணப்படும் வேறுபாட்டையும் மனதில் கொண்டு வேதவசனங்களை விளங்கிக்கொள்ள வேண்டும்.

சுருக்கமாகச் சொல்லப்போனால், ஒரு கதையைச் சொல்லி அதன் மூலம் முக்கியமானதொரு ஆவிக்குரிய போதனையைத் தருவது உவமை. உவமைகளைப் பற்றி விளக்கிய ஒருவர், அவற்றைப் "பரலோகத்து அர்த்தங்களைக் கொண்ட இவ்வுலகக் கதைகள்" என்று சொல்லியிருக்கிறார். உவமைகளை எவ்வாறு விளங்கிக்கொள்ளுவது என்பது தொடர்பாகப் பல விவாதங்கள் நடந்திருக்கின்றன.

*கிறிஸ்தவ திருச்சபையின் ஆரம்பகாலப் பகுதிகளில் அநேகர் உவமைகளில் இருந்து எந்தளவுக்கு அதிகமான போதனைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதில் துடிப்போடு இருந்திருக்கிறார்கள். இதன் காரணமாகவே உவமைகளை உருவகப்படுத்துகின்ற முறை* (Allegorizing) *அன்று பிரபலமாக இருந்தது. அத்தோடு, கிரேக்க தத்துவத்தின் செல்வாக்கினால் உவமைகள் மட்டுமல்லாமல் முழுப் பழைய ஏற்பாட்டையுமே உருவகப்படுத்தி விளக்குகின்ற முறை காணப்பட்டது. அதனால் ஒவ்வொரு உவமையின் பகுதிகளில் இருந்தும் எந்தளவுக்கு அதிகமாக ஆவிக்குரிய பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும் என்று ஆராயும் வழக்கம் ஆரம்பித்தது.*

*வட ஆப்பிரிக்காவில் 396 லிருந்து 430 வரை ஹிப்போவின் பிஷப்பாக இருந்த ஆகஸ்தீன் உவமைகளை இந்த முறையில் விளக்கும் கைங்கரியத்துக்கு முத்திரையிட்டு ஆரம்பித்து வைத்தார். "நல்ல சமாரியன் உவமைக்கு அவரளித்திருக்கும் விளக்கத்தின்படி, காயமடைந்திருந்த மனிதன் ஆதாம்; எருசலேம் பரலோகத்தைக் குறிக்கின்றது; திருடர்கள் பிசாசையும், அவனுடைய அடியாட்களையும் குறிப்பவர்கள்; ஆசாரியனும், லேவியனும் (இரட்சிப்பைத் தரமுடியாத) பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாணத்தைக் குறிக்கின்றார்கள்; சமாரியன் (இரட்சிப்பை அளிக்கின்ற) கிறிஸ்துவைக் குறிக்கின்றான்; தங்குமிடம் திருச்சபை; அதற்குச் சொந்தக்காரன் அப்போஸ்தலன் பவுல்! ஏனையோர் இவற்றோடு எண்ணையும், திராட்சைரசமும் ஞானஸ்நானத்தையும், திருவிருந்தையும் குறிக்கின்றதாக விளக்கமளித்தனர்"* (*Nothing but the Truth*, Brian Edwards, pg 341, Evangelical Press).

*இந்தவிதத்தில் உவமைகளுக்கு விளக்கமளிக்கும் முறை இன்றுவரை தொடர்ந்து வந்திருக்கிறது. அதற்கு மத்தியில் ஆங்காங்கு சிலர் இது சரியான முறையல்ல என்ற எதிர்ப்புக்குரலை உயர்த்தி வந்திருக்கிறார்கள். உவமைகளுக்கு விளக்கமளிக்கிறவர்களைக் கவனித்தால் ஒரு பகுதியினர் அதற்களிக்கும் விளக்கம் எல்லையில்லாதளவுக்கு அதன் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் ஆவிக்குரிய பாடங்களைச் சுட்டுகிறவர்களாக இருப்பார்கள். இவர்கள் உவமையில் காணப்படும் அநேக*

அம்சங்கள் அதன் கதையின் அமைப்போடு மட்டுமே சம்பந்தப்பட்டவை என்பதை மறந்துவிடுகிறார்கள். மறுபுறம், ஒரு உவமையில் ஒரு பாடம் மட்டுமே இருக்கின்றது என்று அதைக்காணுகின்ற செயலில் ஈடுபடுகிறவர்களாக இருக்கிறார்கள் இன்னொரு பகுதியினர். இந்த இரண்டாவது பகுதியினரையே நான் சார்ந்து நிற்கிறேன்.

ஒரு முக்கிய போதனையை விளக்குவதற்காகவே கதை உவமையில் பயன்படுத்தப்படுகிறது. அதனால் சொல்லப்படும் கதையின் அனைத்துப் பகுதிகளுக்கும் விளக்கத்தை நாம் நாடக்கூடாது; அப்பகுதிகளுக்கான ஆவிக்குரிய பொருளைத் தேடி அலையக்கூடாது. உதாரணமாக லூக்கா 15ல் காணப்படும் கெட்ட குமாரனின் உவமையில், அவனுடைய தந்தை, அவன் திரும்பி வந்ததனால் அடைந்த அளவற்ற மகிழ்ச்சியால் அவன் தோளில் போட்ட விலைமதிப்பில்லாத சால்வைக்கும், அவனுடைய விரலில் போட்ட மோதிரத்திற்கும், பாதரட்சைக்கும், கொழுத்த கன்றுக்கும் ஆவிக்குரிய விளக்கத்தைத் தருவதற்கு முயலக்கூடாது. ஏனெனில், அவை மகன் திரும்பி வந்ததால் தந்தை அடைந்த அளவில்லாத மகிழ்ச்சிக்கான அடையாளங்களாக மட்டுமே அந்த உவமையில் காணப்படுகின்றன. வேதம் ஆவிக்குரிய கர்த்தரின் வெளிப்படுத்தல் என்பதால் அதில் விளக்கப்படும் அனைத்திற்கும் ஆவிக்குரிய பொருளைத் தேடியலைவது முட்டாள்த்தனம். வேதம் வெளிப்படுத்தலாக இருந்தபோதும், உலகத்து மொழிகளான எபிரேயம், கிரேக்கம் ஆகியவற்றைப் பயன்படுத்தியே கர்த்தர் தன் சித்தத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். அதனால் வேதத்தை வாசிக்கும்போது உலகத்து மொழிகளுக்குரிய அத்தனை அம்சங்களும் அதில் காணப்படுகின்றன என்ற உணர்வோடு மொழி அணிவகைகளுக்குரிய விதிகளைப் பயன்படுத்தி அவற்றை விளங்கிக்கொள்ள வேண்டும்.

வில்பிரட் கர்ட் எனும் பாப்திஸ்து மிஷனரிப் போதகர் உவமையைப் பற்றிச் சொல்லும்போது, “தெரிந்த ஒன்றைக் காட்டித் தெரியாத ஒன்றை விளக்குவது உவமை” என்று கூறியிருக்கிறார். அதேநேரம், அவர் தொடர்ந்து, “உவமைகளுக்கு சரியான ஆவிக்குரிய விளக்கங் கூறுவது எளிதன்று” என்றும் கூறியிருக்கிறார் (திருமறையை விளக்கும் முறை).

*உவமைகளை வாசிக்கும்போது கீழ்வரும் முக்கியமான உண்மைகளை நாம் மனதில் வைத்து அவற்றை வாசிக்கவேண்டும்.*

***1. உவமைகள், உள்ளுக்குள் மறைந்திருக்கும் அர்த்தங்களைக் கொண்டிருக்கும் சாதாரண கதைகள்.***

*மாற்கு 4:11–12ல் இயேசு விளக்கியிருப்பதை நாம் மறந்து விடக்கூடாது. இதை ஏசாயா 6ல் இருந்து இயேசு விளக்குகிறார்.*

> *அதற்கு அவர்: தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியத்தை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது. புறம்பே இருக்கிறவர்களுக்கோ இவைகளெல்லாம் உவமைகளாகச் சொல்லப்படுகிறது. அவர்கள் குணப்படாதபடிக்கும், பாவங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதபடிக்கும், அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கும்படி, இப்படிச் சொல்லப்படுகிறது என்றார்.*

*இதற்குப் பிறகு மாற்கு 4:33–34ல் நாம் பின்வருமாறிருப்பதை வாசிக்கிறோம்.*

> *அவர்கள் கேட்டறியும் திராணிக்குத்தக்கதாக, அவர் இப்படிப்பட்ட அநேக உவமைகளினாலே அவர்களுக்கு வசனத்தைச் சொன்னார். உவமைகளினாலேயன்றி அவர்களுக்கு ஒன்றும் சொல்லவில்லை; அவர் தம்முடைய சீஷரோடே தனித்திருக்கும்போது, அவர்களுக்கு எல்லாவற்றையும் விவரித்துச்சொன்னார்.*

*இதை இன்னொருவிதமாகச் சொல்லப்போனால், உவமைக்கும் மறைந்து காணப்படும் சில விஷயங்களை ஆவிக்குரிய ஞானத்தைக் கொண்டிருக்கிறவர்களால் மட்டுமே விளங்கி விளக்கமளிக்க முடியும். அதனால்தான் இயேசு தன்னுடைய சீடர்களால் அவற்றை விளங்கிக்கொள்ள முடியும் என்று எதிர்பார்த்தார். அதற்காக, நாம் கண்மூடித்தனமான விதத்தில் உவமைகளில் பாடங்களைத் தேடியலையக்கூடாது. அதைத்தான் ஆகஸ்டீனும் அவருக்குப் பின்வந்த அநேகரும் செய்திருக்கிறார்கள்.*

# விதை நிலங்களின் உவமை
## மத்தேயு *13:1-23*

# 2
# வழியருகே விழுந்த விதை

*மத்தேயு 13 ம் அதிகாரத்தில் அநேக உவமைகள் இருப்பதை நாம் காணலாம். அதில் 7 உவமைகள் விளக்கப்பட்டிருக்கின்றன. இத்தனை உவமைகளை லூக்கா 15, 16 அதிகாரங்களில் நாம் வாசிப்பதில்லை. அங்கு 5 உவமைகள் மட்டுமே காணப்படு கின்றன. இவை அனைத்தும் ஒரே சமயத்தில் ஆண்டவரால் சொல்லப்பட்ட உவமைகளாகும்.*

*மத்தேயு 13:1*

*இயேசு அன்றையதினமே வீட்டிலிருந்து புறப்பட்டுப்போய், கடலோரத்திலே உட்கார்ந்தார்.*

*அவர் தனது ஊழியங்களை ஆரம்பித்தபோது கப்பர்நகூம் எனும் இடத்தைப் பிரதானமாகப் பயன்படுத்தித்தான் ஏனைய இடங்களுக்குப் போய்வந்து தன்னுடைய செய்திகளைக் கொடுத்துக் கொண்டிருந்தார். இங்கு "கடலோரத்தில்" என்று வேதம் சொல்லும்பொழுது அது ஒரு பெருங்கடல் என்று எண்ணிவிடக்கூடாது. உண்மையில் அது ஒரு ஏரி. ஆனால் மிகவும் ஆழமானதும், அகலமானதும், நீளமானதுமான பெரிய ஏரி. கடலைப் போலப் பெரியதாகத் தோற்றமளித்த ஏரி என்று கூறலாம். அந்த ஏரிக்கரையில் அவர் உட்கார்ந்திருந்த பொழுது அநேக ஜனங்கள் அவரைப் பார்ப்பதற்காகவும், பேசுவதற்காகவும்,*

அவர் பேசுவதைக் கேட்பதற்காகவும் கூடி வந்தார்கள் என்று பார்க்கிறோம்.

வந்த கூட்டம் மிக அதிகமாக இருந்ததால் அவர் அங்கிருந்த ஒரு படகில் ஏறினார். அது மீன் பிடிக்கிறவர்கள் பயன்படுத்துகிற படகு. அந்தப் படகில் ஏறி அவர் கடலில், கரைக்குப் பக்கத்தில் சிறிது தூரம் உள்ளே போனார். அவர் அதிக தூரம் போகவில்லை. அந்தக் கரையோரத்துக்குப் பக்கத்திலேயே அந்தப் படகிலிருந்து அவர் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார். அப்படிச் செய்ததற்குக் காரணம் ஜனங்கள் கரையில் அலைமோதிக் கொண்டிருந்ததுதான். கரையில் இருந்திருந்தால் அவர் எல்லோரையும் ஒரே நேரத்தில் பார்ப்பதும் கஷ்டம். அதுமட்டுமில்லாமல் அவரது குரல் முன்னால் இருப்பவர்களுக்குக் கேட்டாலும் பின்னால் இருப்பவர்களுக்குக் கேட்காமல் போய்விடும். ஆகவே, இப்படிக் கடலோரத்திலிருந்த அந்தப் படகில் போய் உட்காரும்போது அவருக்கு அநேகரையும் பார்க்கக்கூடிய ஒரு வசதி இருந்தது. அது மட்டுமல்லாமல் அவர் பேசுகிற குரலுங்கூட பலருக்கும் போய்ச் சேரக் கூடிய ஒரு வசதி இருந்தது. ஆகவே ஆண்டவர் அவ்விதம் செய்தார். இங்கிருந்துதான் உவமைகளின் மூலமாக அவர் பேச ஆரம்பித்தார் என்று நாம் பார்க்கிறோம்.

இந்த உவமைக்குப் பெயர், பொதுவாகவே எல்லாருக்கும் தெரிந்திருக்கிற “விதைக்கிறவனின் உவமை” என்பதாகும். உண்மையில் சொல்லப்போனால் இந்த உவமைக்குப் பொருத்தமான தலைப்பு “விதை நிலங்களின் உவமை” என்பதுதான். ஏன் அப்படிச் சொல்லுகிறேனென்றால் இந்த உவமையினுடைய பார்வை விதை நிலங்களின் மேல்தான் இருக்கிறது. ஆண்டவர் இதில் விதை நிலங்களைப் பற்றியே பேசுகிறார். அந்த விதை நிலங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்த உவமை பேசுவதால் விதை நிலங்களின் உவமை என்ற பெயரே அதற்குப் பொருத்தமாக இருக்கும்.

## உவமை என்றால் என்ன?

அடுத்ததாக நாம் கேட்க வேண்டிய கேள்வி, உவமை என்றால் என்ன? உலகத்தில் இருக்கும் எல்லா மொழிகளிலுமே

அந்த மொழிக்கு அழகு சேர்க்கும்படியாகப் பல வகையான அணிவகைகள் காணப்படும். அதில் ஒன்றுதான் உவமை. ஆண்டவர் பிரசங்கம் செய்தபொழுது அதிகமாகப் பயன்படுத்தியது உரைநடையே. அது எந்தவிதக் குழப்பமும் இல்லாமல் தெளிவாகப் புரிந்துகொள்ளக்கூடிய பேச்சு. இருந்தபோதும் மொழிக்குரிய வேறு அணிவகைகளையும் அவர் பயன்படுத்தாமல் இருந்ததில்லை. வேதத்தில் பார்க்கிறபொழுது உவமைகள், நீதிமொழிகள், பாடல்கள், சங்கீதங்கள் என்று அதில் பல்வேறு அணிவகைகள் காணப்படுகின்றன. உருவகம் என்கிற ஒரு அணிவகையும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எல்லாருக்கும் தெரிந்த அடையாள மொழி நடையும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அது குறிப்பாக வெளிப்படுத்தின விசேஷம் மற்றும் எசேக்கியல், தானியேல் போன்ற நூல்களில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆகவே வேதம் சத்தியத்தை நமக்கு விளக்குகிறபோது உரைநடையை மட்டும் பயன்படுத்த வில்லை. ஒரு மொழிக்குரிய அநேக அணிவகைகளையும் ஆண்டவர் அதில் பயன்படுத்தியிருக்கிறார். வேதத்தை எழுதிய ஏனைய எழுத்தாளர்களுடைய எழுத்திலும் அவற்றைக் காணலாம்.

உவமை என்பது ஒரு கதையைச் சொல்லி ஒரு சத்தியத்தை விளக்கப்படுத்துவதாகும். இவை பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என வேதம் முழுவதும் அநேக உவமைகள் காணப்படுகின்றன. உதாரணத்துக்கு பழைய ஏற்பாட்டில் தாவீது மகா பெரிய பாவத்தைச் செய்துவிட்ட பொழுது நாத்தான் தீர்க்கதரிசி அவனிடத்தில் போய் அவனுடைய குற்றத்தை உணர்த்துவதற்கு உரைநடையைப் பயன்படுத்தவில்லை. ஒரு உவமையைப் பயன்படுத்தி ஒரு கதையைச் சொல்லி அந்தக் கதையின் மூலமாக அவனுடைய பாவத்தை உணர்த்தினான். அப்பொழுது அந்த கதையில் இருக்கின்ற மனிதன் தான்தான் என்பதை தாவீது உணர்ந்தான். ஆகவே ஒரு கதையின் மூலமாக ஒரு விஷயம் சொல்லப்படுகிறது. அதுபோல்தான் இங்கு ஆண்டவர் இந்த உவமையைப் பயன்படுத்தி சத்தியத்தை விளக்குகிறார்.

## ஆண்டவர் ஏன் உவமைகளாகப் பேசினார்?

*சீடர்கள் அவரிடம் வந்து கேட்கிறார்கள், ஏன் அவர்களோடே உவமைகளாகப் பேசுகிறீர்? (13:10). அப்படியானால் அவர்களுக்கு உவமைக்கும் உரைநடைக்கும் இடையிலிருந்த வேறுபாடு தெரிந்திருந்தது. அப்பொழுது ஆண்டவர் சொல்கிறார், உங்களுக்கு பரலோகத்தின் இரகசியங்களை அறியும்படி அருளப்பட்டிருக்கிறது. அதனால் இது உங்களுக்குப் புரியும், ஆனால் அந்த ஆசீர்வாதம் இல்லாதவர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு அது புரியாதிருக்கும்படிக்கு உவமையில் பேசுகிறேன் என்றார் (13:11–13). இயேசுவின் பதிலை நாம் தவறாக விளங்கிக்கொள்ளக்கூடாது. உவமையில் பேசினால் ஒருவருக்கும் புரியாது என்று நினைக்கக்கூடாது. அவ்வாறாக ஆண்டவர் சொன்னதற்குக் காரணம், யூதத் தலைவர்களான பரிசேயர்கள், சதுசேயர்கள், ஜெப ஆலயத்தலைவர்கள் எல்லாருமே ஆண்டவரைப் பரம எதிரியாகக் கருதினார்கள். அவர் யூத மதத்தை அழிப்பதற்காக வந்தவர் என்று கருதி அவரை மேசியாவாகப் பார்க்க மறுத்தார்கள். அவர்களுடைய கடின இருதயத்தினால் வேதத்தைக் கேட்பதற்கோ, அவருக்கு தங்களுடைய இருதயத்தில் இடம் கொடுப்பதற்கோ அவர்கள் தயங்கியதால்தான் ஆண்டவர் சொன்னார், இதனை அறிந்துகொள்ளக்கூடிய ஆசீர்வாதம் அவர்களுக்கு இல்லை, ஆனால் உங்களுக்கு அது கிடைத்திருக்கிறது, என்று.*

*இருந்தபோதும் ஆண்டவர் சொல்லுகிறார் காதுள்ளவன் கேட்கக்கடவன். ஏன் அவ்வாறு சொல்கிறார்? நம் எல்லோருக்கும் காது இருக்கிறதுதானே? அவர் அவ்விதம் சொல்லுவதற்கு அர்த்தம் ஒரு விஷயத்தில் அக்கறை செலுத்தி முழு மனத்தையும் அதில் ஈடுபாடு செலுத்தி கேட்கிறவனுக்குத்தான் வசனம் பயன் தரும். வசனத்தை உதாசீனப்படுத்துகிறவர்களுக்கோ, கடின இருதயம் இருப்பவர்களுக்கோ, வேத வார்த்தையை அலட்சியப்படுத்துகிறவர்களுக்கோ வேத வார்த்தையின் மூலமாக எந்தப் பயனும் கிடைக்காது. ஆகவேதான் ஆண்டவர் சொல்லுகிறார் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று. அத்தோடு எவனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவன் மட்டுமே வசனத்தை விளங்கிக்கொள்ளுவான். ஆண்டவரின் வார்த்தையை*

விளங்கிக்கொள்ளுவதற்கு நம் காதுகளைப் பரிசுத்த ஆவியானவர் திறக்க வேண்டும். இயேசுவின் சீடர்களுக்கு இந்த உவமையின் விளக்கம் நிச்சயம் தெரிந்திருந்தது. ஆவிக்குரியவர்களாக இருப்பவர்களுக்கே உவமைகள் புரியும். வசனத்தினுடைய பயனை நாம் அடைவதற்குக் கர்த்தருடைய உதவியும், ஆவியானவருடைய உதவியும் நமக்கு அவசியமாயிருக்கிறது.

இப்போது இந்த விதைநிலங்களின் உவமையில் முதலாவதான வழியேருகே விழுந்த விதையாகிய உவமையை ஆராய்வோம்.

*மத்தேயு 13:3–9*

*அவர் அநேக விசேஷங்களை உவமைகளாக அவர்களுக்குச் சொன்னார்: கேளுங்கள், விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான். அவன் விதைக்கையில், சில விதை வழியருகே விழுந்தது; பறவைகள் வந்து அதைப் பட்சித்துப்போட்டது. சில விதை அதிக மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்தது; மண் ஆழமாயிராததினாலே அது சீக்கிரமாய் முளைத்தது. வெயில் ஏறினபோதோ, தீய்ந்து போய், வேரில்லாமையால் உலர்ந்து போயிற்று. சில விதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது; முள் வளர்ந்து அதை நெருக்கிப்போட்டது. சில விதையோ நல்ல நிலத்தில் விழுந்து, சிலது நூறாகவும், சிலது அறுபதாகவும், சிலது முப்பதாகவும் பலன் தந்தது. கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றார்.*

இதற்கான விளக்கம் வசனங்கள் 18 முதல் 23 வரை கொடுக்கப்பட்டுள்ளது.

*மத்தேயு 13:18–23*

*ஆகையால் விதைக்கிறவனைப்பற்றிய உவமையைக் கேளுங்கள். ஒருவன், ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும்போது, பொல்லாங்கன் வந்து, அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக் கொள்ளுகிறான்; அவனே வழியருகே விதைக்கப்பட்டவன்.*

*கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்டு, உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொள்ளு கிறவன்; ஆகிலும் தனக்குள்ளே வேரில்லாதவனாய், கொஞ்சக் காலமாத்திரம் நிலைத்திருப்பான்; வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைவான். முள்ளுள்ள இடங்களில் விதைக்கப் பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால், அவனும் பலனற்றுப் போவான். நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும் அறுபதாகவும் முப்பதாகவும் பலன் தருவான் என்றார்.*

இந்த உவமையில் வருகின்ற விதைக்கிறவனாகிய பாத்திரம் ஆண்டவரைக் குறிக்கிறது. ஆண்டவர்தான் உண்மையாகவே சத்தியத்தை விதைக்கிறவர். விதைக்கப்படுகிற விதை சத்தியம், தேவனுடைய வார்த்தை, சுவிசேஷம் என்றும் சொல்லலாம். இந்த உவமையில் நான்கு வகை நிலங்களைப் பார்க்கிறோம்.

1. முதலில், பாதை அருகே, அதாவது வழியருகே உள்ள நிலம்.
2. இரண்டாவதாக, கற்பாறைகள் காணப்படுகின்ற நிலம்.
3. மூன்றாவது, முற்செடிகள், களைகள் வளர்கின்ற நிலம்.
4. நான்காவது, நல்ல நிலம்.

இந்த நான்கு நிலங்களும் எதைக் குறிக்கின்றனவென்று கேட்டால், அது நான்கு வகையான மனிதரின் இருதயங்களின் தன்மையை விளக்குகின்றன. அதாவது, தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்படுகிறபோது எந்த நிலையிலிருக்கும் இருதயத்தைக் கொண்டிருந்து மனிதர்கள் தேவனுடைய வார்த்தையைக் கேட்டுப் பயனடைகிறார்கள் என்பதை இந்த நான்கு நிலங்களும் காட்டுகின்றன. அதாவது, வழியருகே போன்ற நிலம், கற்பாறைகள் போன்ற இருதயம், முட்செடிகளும் களைகளும் காணப்படுகின்ற

இருதயம், நல்ல நிலம் போன்ற இருதயங்களை கொண்டிருந்து மனிதர்கள் தேவனின் வார்த்தையைக் கேட்டு, தங்களுடைய இருதயத்திற்கேற்ற பலனை அடைகிறார்கள். இந்த நான்கு வகை நிலங்களில் இப்போது முதல் வகை நிலத்தை ஆராய்வோம்.

## முதலாவதாக, வழியருகே உள்ள நிலம்

நான்காவது வசனத்தில், "அவன் விதைக்கையில், சில விதை வழியருகே விழுந்தது; பறவைகள் வந்து அதைப் பட்சித்துப்போட்டது." என்றிருக்கிறது. அதாவது, பறவைகள் வந்து கொத்தி எடுத்துக்கொண்டுபோய் விட்டன. மத்தேயு 13 வது அதிகாரத்தில் பார்க்கிற உவமையை மாற்கு 4 வது அதிகாரத்திலும், லூக்கா 8 வது அதிகாரத்திலும் பார்க்கலாம். மாற்குவும், லூக்காவும் இதை விளக்கியபோதும் மத்தேயு அளவுக்கு அதை நீளமாக விளக்கவில்லை. இருந்தபோதும், ஒரு உவமையைப் புரிந்து கொள்ளுவதற்கு வேறு எந்தப் பகுதிகளில் அதே உவமை காணப்படுகின்றது என்று பார்த்து இந்த மூன்றையும் சேர்த்துப் படிக்கின்றபோது அதனுடைய முழுமையான அர்த்தத்தை நாம் எப்போதும் புரிந்துகொள்ளலாம். ஆகவே மாற்குவும், லூக்காவும் கூட இந்த உவமையைப் புரிந்துகொள்ள நமக்கு நிச்சயமாக உதவி செய்கிறார்கள். இந்த உவமையின் மூலமாக ஆண்டவர் தேவ ராஜ்யத்தின் ரகசியத்தை வெளிப்படுத்துகிறார். அதாவது சத்தியத்தை வெளிப்படுத்துகிறார்.

நாம் இங்கே முதலில், ஆண்டவர் சொன்ன உவமையை அல்லது உதாரணத்தை அல்லது ஒரு எடுத்துக்காட்டை அல்லது கதையை ஆராய்ந்து பார்த்து விளங்கிக்கொண்ட பிறகு அது யாரைக் குறித்துப் பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பார்க்கலாம். இங்கே சொல்லப்படுகிற வழியருகே உள்ள நிலம் எது? அதைப் புரிந்துகொள்ள நாம் ஒரு வயல் நிலத்தை எடுத்துக் கொள்வோம். அந்தக் காலத்தில் இது மத்திய தரைக்கடல் பகுதியில் உள்ள ஒரு விவசாயியின் நிலத்தைத்தான் குறிக்கிறது. வயல் நிலங்களை நமக்கு நன்றாகத் தெரியும். வயல் நிலத்தில் வரப்புகள் இருக்கும். விவசாயி நடந்து போவதற்கும், நிலத்தைத் தாண்டிப் போவதற்கும் பயனுள்ளதான ஒரு வழி இருக்கும். அந்த வழி ஒரு மூன்று

அடிக்கு மேல் அகலமாக இருக்காது. அது நடந்து போவதற்காகப் பயன்படுத்தப்படுவது. அதுமட்டுமில்லாமல் தண்ணீர் எல்லா இடத்துக்கும் போகாமல் இருப்பதற்காகவும் இந்த வரப்பு கட்டப்படுகிறது. அது ஒரு பாதையாகவும் இருக்கிறது. ஆண்டவர் இயேசு கிறிஸ்து தன்னுடைய சீடர்களோடு அன்றைக்கு அங்கிருந்த விளைச்சல் நிலத்தில் நடந்துபோனபோது சீடர்கள் அங்கிருந்த நிலத்திலிருந்த பயிரிலிருந்து மணிகளை எடுத்துச் சாப்பிட்டார்கள். அப்பொழுது பரிசேயர்கள் அதைப் பார்த்து இயேசுவைக் குற்றஞ்சாட்டினார்கள். அப்படி அன்று அவர்கள் நடந்துபோனபோது எப்படி நடந்துபோய் இருப்பார்கள்? இந்த வழியருகே உள்ள பகுதியில்தான் அவர்கள் நடந்து போய் இருப்பார்கள். ஏன் ஆண்டவர் இந்த உவமையில் வழியருகே உள்ள நிலத்தைப் பயன்படுத்தினார்? அதற்குக் காரணம் என்ன என்பதை நாம் கேட்டுப் பார்க்க வேண்டும்.

வழியருகே என்பது ஒரு சிறு குறும்பாதை. இந்தப் பாதையினுடைய தன்மை எப்படிப்பட்டதாக இருந்திருக்கும்? விதைகள் விதைப்பதற்காக இது பயன்படுத்தப்படுகிற ஒரு பகுதி அல்ல. ஏனெனில் விதை வளர்ப்பதற்காக ஏற்கனவே விவசாயி ஒரு இடத்தை நன்றாகப் பதப்படுத்தியிருப்பான். ஆனால், இந்தக் குறும்பாதை நடந்து போவதற்கு மட்டுமே உதவும். அதுமட்டுமல்லாமல் இது எந்தவிதத்திலும் தயார் செய்யப்படாத ஒரு பகுதியாக இருப்பதால் அது மிகவும் கடினமாக இருக்கும். அதில் முட்கள் நிறைய இருக்காது, இருந்தாலும் கொஞ்சம் கடினமானதாக கற்கள் நிறைந்ததாக இருக்கும். அது மிகவும் இறுகிப்போய்க் காணப்படும். இது விதை நிலமாக இல்லாததால் அதை விவசாயி பதப்படுத்தியிருக்க மாட்டான். அந்தப் பாதைவழியில் சாதாரணமாகவே எந்த விவசாயியும் விதைகளை விதைக்க மாட்டான். அவன் அதற்கான நிலத்தை ஏற்கனவே பதப்படுத்தி உழுது நன்றாகத் தயார் செய்திருப்பான். அப்படியாக உழுது தயார் செய்யப்பட்ட நிலத்தில் தான் விதைகள் பலன் கொடுக்கும். ஆகவே இந்தப் பாதையில் விதைக்கப்படும் எதுவுமே ஒருகாலமும் பயன் கொடுக்காது. அதுதான் இங்கு சொல்லப்படுகின்ற உவமையாகும்.

# Bibliography


1. *Nothing but the Truth*, Brian H. Edwards, Evangelical Press.
2. *He spoke in parables*, Gordon J. Keddie, Evangelical Press.
3. *The Gospel of Matthew*, Wiiliam Hendriksen, The Banner of Truth.
4. *St Matthew"s Gospel*, R. C. H. Lenski, Augsburg Publishing House.
5. *The Parable of the Sower,* R. C. Sproul, (learn.ligonier.org/sermons/parable-sower-luk8)
6. திருமறையை விளக்கும் முறை, வில்பிரட் எச். கர்ட்.
7. இரட்சிப்பின் ஆசீர்வாதங்கள், ஆர். பாலா, சீர்திருத்த வெளியீடுகள்.